# பாதுகாவலன்

PATHUKAVALAN


**ஐக்கியம்**

ஒரு சமூகத்தின்
உண்மையான பலம்
அவர்களின்
ஐக்கியத்திலே தான்
தங்கியுள்ளது.
நீதியின்
வழிகாட்டலில்
தான்
இந்த ஐக்கியம்
உருவாக்கப்பட
முடியும்.


மலர்: 117 இதழ் : 5 12-3-1991 (ஏப்ரல். 12 — ஏப்ரல். 26) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


# கிறிஸ்தவ சீடத்துவம் - கருத்தரங்கு

**கிறிஸ்துவுடன் ஆழமாக உறவுகொண்டு, தன்னை வெறுமையாக்கி, பிறருக்குப் பிட்டுக் கொடுப்பதே கிறிஸ்தவ சீடத்துவமாகும். இது வாழப்பட்டு, வளர்ச்சிபெற்று, கிறிஸ்துவில் சங்கமமாகவேண்டும்.**

யாழ். மறைவட்ட, பொது நிலையினர் ஆணைக் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட கிறிஸ்தவ சீடத்துவம் என்ற மையப் பொருள்கொண்ட கருத்தரங்கு இம்மாதம் 2, 3, 4—ந் திகதிகளில் யாழ். பொது நிலையினர் கழக மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இக் கருத்தரங்கை யாழ் ஆயர் பேரருட்திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் திருப்பலியுடன் ஆரம்பித்து வைத்து, ஆசியுரையும் வழங்கினார்கள். ஆணைக்குழுத்தலைவர் அருட்திரு S. H. ஜெபநேசன் அடிகளார் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து பின் வரும் தலைப்புகளில் உரைகள் நிகழ்த்தப்பட்டன. ஒவ்வொரு உரையையும் தொடர்ந்து குழு ஆய்வு நடைபெற்றது. இறுதி நாளில் சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. மையப்பொருள்பற்றிய விளக்கமும், நெறிப்படுத்தல் முறையும் (அருட்திரு S. J இம்மனுவல்)
2. நற்செய்திகளில் கிறிஸ்தவ சீடத்துவம்: (அருட்திரு F. ஞானானந்தன்)
3. அப்போஸ்தலர் பணியிலும், புனித சின்னப்பர் திருமடல்களிலும் கிறிஸ்தவ சீடத்துவம்: (அருட்திரு M. சவுந்தரநாயகம்)
4. இன்றைய சமூக, அரசியற் சூழலில் கிறிஸ்தவ சீடத்துவம்: (அருட்திரு S.M. செல்வரட்ணம்)
5. பன்மறைச் சூழலில் கிறிஸ்தவ சீடத்துவம்: (அருட்திரு A. J. V. சந்திரகாந்தன்)
6. இன்றைய திருச்சபையில் சீடர்கள் : (அருட்திரு S. J. இம்மனுவல்)

வாகனப் போக்குவரத்து வசதிகளற்ற இக்கட்டான இந்தக் காலத்திலும், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட்டக்கச்சி, கிளிநொச்சி, பருத்தித்துறை போன்ற தூர இடங்களில் உள்ள பங்குகளில் இருந்தும் பிரதிநிதிகள் கருத்தரங்

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

# தவறான பத்திரிகைச் செய்தி

பம்பாய் நகர்க் கிறிஸ்தவர்கள் தவறான பத்திரிகைச் செய்திக்கு வருத்தம் தெரிவிக்குமாறு சில பிரபல பத்திரிகைகளைக் கேட்டுள்ளனர். இப் பத்திரிகைகள் கடந்த நவம்பர் மாதம் அனாதைச் சிறுவருக்காக நடத்தப்படும் ஓர் இல்லத்தில் கொலையுண்டு கிடந்த இரு கத்தோலிக்க கன்னியரைப் பற்றி அவதூறான செய்தியைப் பிரசுரித்தமைக்காகவே இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

1990 நவம்பர் 18ஆம் திகதியன்று வெளிவந்த பல பிரபல பத்திரிகைகள் இக்கன்னியரின் மரண விசாரணையின் போது இவர்கள் ஒழுக்கக் கேடான வாழ்க்கை நடத்தியதாகவும் அவர்களிலொருவர் பாலியல் நோய்க்கு ஆளாகியிருந்ததாகவும் தெரியவந்துள்ளதென செய்திகள் வெளியிட்டிருந்தன.

இக்கூற்று முற்றும் தவறானது, ஆதாரமற்றது என கருதினால் பிமென்ரா தலைமையில் பம்பாயில் ஜனவரி 26ஆம் திகதி கூடிய கத்தோலிக்க குழு ஒன்று கண்டனம் தெரிவித்துள்ளது.

பிரேத பரிசோதனையின் கண்டுபிடிப்புகளை ஆராய்ந்த நிபுணர் குழு பத்திரிகையில் வெளிவந்த செய்தி முற்றும் ஆதாரமற்றது எனத் தெரிவித்ததாக கருதினால் பிமென்ரா கூறினார்.


அதே சமயத்தில் கொலையாளிகளைப் பொலிசார் கண்டுபிடிக்கத் தவறியமையும் திருச்சபை வட்டாரங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இக் குற்றம் மிகக்கவனமாக திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளது என்றும், தப்பான, அவதூறான செய்திகளைக் கிளப்பிவிட்டது மக்களின் கவனத்தைத் திசை திருப்பவே என்றும் எஸ். எம். ஏ. கன்னியர்களின் தலைமைத் தாயார் கூறியுள்ளார்.

இத் தகவல் பொலிசாரிடமிருந்தே தமக்குக் கிடைத்ததாகப் பத்திரிகைகள் கூறியிருப்பினும் பொலிசார் இதனை மறுத்துள்ளனர்.

## இறைபணியில் வைர விழா நாயகர்

### உபதேசியார் முத்து ஐயா

— தாவீது தாசன்



**உபதேசி யார்?**

முத்தான மொழியில் சத்திய வேதம் பற்றி சத்தான கதை கூறி இறை மக்களைத் தம்பால் ஈர்ந்தவர் முத்தையா உபதேசியார். வெள்ளையுடை தரித்து வெள்ளையுள்ளத்துடன் பிறசமயத்தவர்க்கு அன்புடன் இறைமகன் யேசுவை அறிமுகம் செய்தவர் உபதேசியார்.

நான்கு ஆயர்களின் அருள் ஆட்சியினைக் கண்டு களித்த

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# பொதுநிலையினரின் தூதுரைப்பணி

''மக்களின் ஒளி கிறிஸ்து. அவ்வொளியை எல்லா மனிதரிடத்திலும் ஏற்றிவைப்பதே'' திருச்சபையின் முதலும் முடிவுமான காரணம். ஏனெனில் திருச்சபை ''அனைவர்க்கும் மீட்புத்தரும் திருவருட்சாதனமாக இருக்கவே இறைவனால் நாடுகளுக்கு அனுப்பப்பட்டது'' (வத் II திருச்சபை 1 மறைபரப்புப் பணி)

திருச்சபையின் உட்பொருளுக்கு உரிய, உயிராதாரமான இப்பணி அதன் உறுப்பினர் அனைவர்மீதும் சுமந்த கடமை என்பதைப் பொதுநிலையினர் எவ்வாறு, எந்த அளவுக்கு அறிந்து உணர்ந்து செயல்பட்டுள்ளனர்? பொதுநிலையினரின் காலம் எனப் போற்றப்படும் இந்நாட்களில் இது மிகப் பொருத்தமான, சிந்தனைக்குரிய வினாவன்றோ. ஆதித் திருச்சபை வளமிகுந்த வாழை போல் தழைத்துச் செழித்து மிக விரைவாக வளர்ந்ததென்றால், உரோமைச் சாம்ராஜ்யத்தில் நிகழ்ந்த கொடூர கலாபனைக் காலத்திலும் வளர்ச்சி குன்றாமல் ஆலமரம் போல் விரிந்து பரந்து வேரூன்றி விழுதூன்றித் தலைநிமிர்ந்து நின்றதென்றால், அது ஒருசில குருக்களும், ஆயரும் புரிந்து வந்த பணியால்தான் எனக் கூறுவது பொருந்தாது.

புனித சின்னப்பரே இதுகாரியத்தில் பொதுநிலை மக்களின் சேவையைப் பாராட்டியுள்ளார். 16ஆம் நூற்றாண்டில் கொரியாவில் கிறிஸ்துவை முதன்முதல் அறிமுகப்படுத்தியது மிஷனரிக் குருக்களல்ல, பொதுநிலையினரே.

**திருச்சபையின் போதனை**

இவ்வாறு நற்செய்தி அறிவிப்புப் பணியில் பொதுநிலையினர் உட்படத் திருச்சபையின் மக்கள் அனைரும் ஈடுபடுவதே முறையாகும். இக்கருத்தை இரண்டாம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்தி, பொதுநிலையினரின் அப்போஸ்தலம்பற்றி ஒரு தீர்மானத் தொகுப்பை வெளியிட்டது. இந்த ஆவணத்தின் 33ஆம் எண்ணிலிருந்து ஒருசில வசனங்கள்.

''பொதுநிலையினர் ....... திருச்சபைக்கு வளர்ச்சி அளிக்கவும், அதை இடையறாது புனிதப்படுத்தவும் பாடுபடும்படி அழைக்கப் பெறுகின்றனர்......திருச்சபையின் மீட்புப் பணியில் பங்கேற்பதே பொது நிலையினரின் அப்போஸ்தலப் பணியாகும். இதற்காகவே திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் மூலம் அனைவரும் ஆண்டவரால் அதிகாரபூர்வமாக அனுப்பப்பெற்றிருக்கின்றனர். எனவே இறைவனின் மீட்புத் திட்டம் எல்லாக் காலங்களிலும் இடங்களிலும் வாழும் மக்களனைவரையும் மென்மேலும் தழுவும்படியாகப் பணிபுரிய வேண்டிய தலையாய கடமை பொதுநிலையினர் அனைவரையும் சார்ந்துள்ளது.''

**பணியாற்றும் வகை**

இப்பணியை நிறைவேற்றப் பொது நிலையினரிடமிருந்து முதன்முதலாக எதிர்பார்க்கப்படுவது கிறிஸ்தவ வாழ்வின் சாட்சியமே. ''உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க'' (மத். 5:16) என்றவாறு கிறிஸ்துவைப் பிரதிபலிப்பதே முதற் கடமை.

அக்காலத்தில் இந்தியாவுக்கு வந்து வாழ்ந்த மேனாட்டாரின் துன்மாதிரிகை தம் பணிக்கு இடையூறாக இருப்பதாகப் புனித சவேரியார் குறைப்பட்டதை நினைவு கூருவோம்.

இத்தோடு நின்றுவிடாமல் உலகின் உப்பாகவும் புளிக்காரமாகவும் செயல்பட்டு, பொது நிலையினர் சமுதாயத்தை ஊடுருவி அதைக் கிறிஸ்து மயமாக்கவும் பாடுபடவேண்டும்.

மிஷன் நாடுகளிலும் இடங்களிலும் முன்னணியில் நின்று உழைப்போருக்குத் தங்கள் செபதபத்தால் பின்னணித் துணையாக நிற்பதும் இக்கடமையில் உட்படும்.

தேவ அழைத்தலை ஊக்குவித்துப் போதுமான ஆட்களை இறைவனின் விளைநிலத்திற்கு அனுப்பும் பொறுப்புப் பெற்றோர், ஆசிரியர் போன்ற பொதுநிலையினரையேசேரும்.

தேவையான பொருளுதவி அளிப்பதும் இப்பணியில் இன்றியமையாத இடம்பெறுகின்றது. இதனை எளிதில் செய்யவே பிரஞ்சுப் பெண்மணி பாவுலின் ஜெரிக்கோ விசுவாசப்பரப்புதல் சபையை நிறுவினாள். அவ்வாறே ஜெர்மனியில் 150 ஆண்டுகளுக்கு முன் இறந்த டாக்டர் என்ரிக்கு ஹான்ஸ்ட என்பவர் ''புனித பிரான்சிஸ் சவேரியார் சபை'' ஒன்றை ஏற்படுத்தினார். இதுவே இன்று ''மிசியோ'' என்னும் பெயருடன் மறைபரப்பு நாடுகளுக்குப் பேருதவிபுரிந்து வருகிறது. பேர்போன இவ்விருவரும் பொதுநிலையினரே என்பது பெருமைக்குரியது.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### சமாதானம் சந்திக்குமா?

சமாதானக் குரல் பாரிலே பல திசைகளிலும் முழங்கப்பட்டு வருகின்றது. போர்க்களத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமக்கு சமாதானம் ஓர் எட்டாப் பழமாகத் தோன்றுகின்றது, சமாதானப் பேச்சு வார்தைகள் எமது நாட்டில் ஒரு நீண்ட சரித்திரமாகிவிட்டது. செவிடன் காதில் ஊதும் சங்கொலியாக சமாதானம் மாறிவிட்டது. போரின் விளைவுகளைத் தாங்கமுடியாத தமிழ் மக்கள் விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். வாழ்விலே துன்பம் என்பதைவிட, துன்பமே எமது வாழ்வு என்றாகிவிட்டது. இந்நிலையில் சமாதானம் சந்திக்குமா என்ற ஏக்கம் எம் எல்லோரையுமே குழப்பி விடுகின்றது.

போரும் நடைபெறலாம் — சமாதானப் பேச்சு வார்த்தையும் நடைபெறலாம் என்ற முரண்பட்ட முனைகளை இணைக்கும் முயற்சிதான் இன்றைய அரசியல் நிலை. காயத்தைக் குணப்படுத்திவிட்டு வா, பின்பு சிகிச்சை செய்யலாம் என்று மருத்துவர் கூறினால் யார் ஏற்றுக்கொள்வார்கள்? வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போன்று இன்று தமிழ் மக்கள் வேதனை அனுபவிக்கின்றார்கள். போரை நிறுத்திக் கொண்டால் போதும். மீதியைப் பிறகு பார்க்கலாம் என்ற அளவுக்கு மக்கள் ஏங்கி நிற்கிறார்கள். இந்நிலையில் சமாதானம் வெகு தொலைவில்தான் மறைந்து நிற்கிறது.

எமது நாட்டு மக்களை வழிநடத்த நான்கு பெரிய மதங்கள் உண்டு. இந்த மதங்கள்கூட சமாதானத்தை விரும்பவில்லையா என்று பலர் சந்தேகப்படுகின்றனர். சமாதானக் குரல் கொடுத்தோம் என்று மனச்சாந்தியுடன், மதத்தலைவர்கள் தம் கடமை முடிந்தது என்று மௌனமாயிருக்கலாம். சமாதான அறிக்கை விடுத்தோம் என்று வேறு சிலர் திருப்தியடையலாம். மதங்கள் மரத்துப் போய்விட்டனவா என்ற கேள்வியும் எழத்தான் செய்கின்றது. அப்படியென்றால் மக்களின் மனங்கள் மரத்துப் போவதில் வியப்பில்லை. மரத்துப்போன மனங்களிலே சமாதானம் சந்திக்க இடமில்லை.

கிறிஸ்தவர்கள் என்றமட்டில் நாம் சமாதானத்தையே நாடியிருக்க வேண்டியவர்கள். உயிர்த்த கிறிஸ்துவின் கொடை சமாதானம். அன்று இயேசுவின் சீடர்கள் குழம்பிநின்ற வேளையில், மனம் கலங்கியிருந்த வேளையில், விரக்தி நிறைந்த நிலையிலே, அச்சம் ஆட்கொண்டவேளையில் எதிர்பாராத குரல் ஒன்று ''சமாதானம்'' என்று ஒலித்தது. அக் குரலை சீடர்களால் நம்பமுடியவில்லை. நம்பமுடியாமற் போனதற்குரிய காரணம் — கிறிஸ்து எவ்விதம் மரணத்தை வென்றார் என்பது அவர்களது மனித புத்திக்கு எட்டவில்லை.

மதங்களில் உள்ள நற்செய்தி வெறும் ஏட்டில் அல்ல, மனித உள்ளங்களிலே விதைக்கப்படவேண்டும். கிறிஸ்துவின் நற்செய்தி எமதுவாழ்க்கையிலே வாழ்ந்து காட்டப்படுதல் அவசியமானது. சமாதானம் சாத்தியமானது — நம் வாழ்விலே சந்திக்கக் கூடியது. மனங்களிலே மாற்றம் வேண்டும். அரசியல் தலைவர்களும், மதத்தலைவர்கள் — சாதாரண மக்களும் மனமாற்றமடையாமல் சமாதானத்தை நாம் எதிர்கொள்ள முடியாது. உள்ளத்திலே இல்லாத சமாதானத்தை நாட்டிலே அல்லது உலகிலே காண்பது முடியாத காரியம்.

சமாதானம் இறைவனின் கொடை; அதற்கு மனிதன் தடையாக இருக்கக் கூடாது.

# நீதியின் அறுவடை சமாதானம்

நீதி, சமாதானம், மனித வளர்ச்சிக்கான தேசிய கத்தோலிக்க ஆணைக்குழுவின் தலைவர் அதி வண. கலாநிதி ரேமண்ட் பீரிஸ் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை.

எமது தேசம் மீண்டும் அபாயத்தில் துன்பத்தில் மூழ்கியுள்ளது. வடக்கிலும், கிழக்கிலும் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை நாம் வெளியில் வரமுடியாத ஓர் வன்முறை வட்டத்தை உருவாக்கியிருக்கின்றது. சாவு, அழிவு, அரசியல் குளறுபடி என்பன எங்கள் நிதானபுத்தியை வென்றுவிட்டன. உள்ளுக்குள் இருந்த இனவாதத் தன்மைகள் பயங்கர வடிவங்களில் பீறிட்டு வெளிவருவது நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் பெரும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தப்போகின்றன.

எமது நாட்டின் கறைபடிந்த இந்த வரலாற்றுக்கட்டத்தில் நாம் மௌனம் சாதிப்பது எமது பலவீனமாக, ஏனோதானோப் போக்கிற்குரிய தொன்றாகத் தவறாகப் புரிந்துகொள்ளப்படமுடியும். எனவே நாம் ஓங்கிச் சத்தம் போட்டுச் சொல்ல வேண்டிய சில காரியங்கள் இருக்கின்றன. ஒரே நாட்டில் வாழும் சகோதர சகோதரிகளுக்கிடையிலான இந்த யுத்தம் நாம் சீர் செய்ய முடியாத அழிவிற்கு எம்மை அழைத்துச் செல்கின்றது. உணவிற்காக, கல்விக்காக, சுகாதாரத்திற்காக, போக்குவரத்திற்காக, மேலும் எமது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகப் பாவிக்கப்பட்டிருக்கக் கூடிய கோடானுகோடி ரூபாய்கள் யுத்தம் என்ற பலிபீடத்தில் பலிப்பொருளாகச் செலுத்தப்பட்டிருக்கின்றன. இனபேதத்தைக் கடந்து, நாம் வறுமை போக்கப்படும், மனித மாண்பு பேணப்படும் பொன்னாளைக் காண்பதெப்போது?

சிங்களவரோ, தமிழரோ, முஸ்லீம்களோ அவர்களுக்கு நீதியையும், அந்த நீதியை ஊர்ஜிதப்படுத்தும் ஜனநாயக அரசியல் உணர்வையும் ராணுவ பலமோ புரட்சிப் போராட்டமோ கொண்டு வரப்போவதில்லை. 'தேசப்பற்று' என்ற கோஷத்தால் எமது இளம் உள்ளங்களில் மயக்கத்தை போதையை உண்டு பண்ண நினைக்கும் செயல்களை நாம் அனுமதிக்க கூடாது. யுத்தத்தின் கோர விளைவுகளால் வாடும் அப்பாவிகள், விதைவைகள், அநாதைகள் என்பவர்களைப் பற்றிக் கொஞ்சமும் சிந்திக்க விடாது ''ஆயுதம் தாங்கி வீரமரணம் எய்துவோம் மாவீரராகுவோம்'' என்று எங்கள் இளைஞருக்கு வலை வீசுபவர்களை சரியாகச் சிந்திக்கும் எவரும் கண்டனம் செய்யாமல் விட்டுவிடக் கூடாது. அப்பாவி மக்களின் உயிரைக் காத்து எதிரியின் உயிரைக் குடிக்கலாம் என்பது ஓர் மாயை. இன்றைய நவீன யுத்தத்தில் உபயோகிக்கப்படும் ஆயுதங்கள் இயற்கைக்கும், மக்களுக்கும் கொண்டு வரும் பாதகமான விளைவுகள், அவை கொண்டுவர நினைக்கும் சாதகமான விளைவுகளிலும் அதிகமாக இருப்பதால் அந்த ஆயுத உபயோகிப்பு அறத்தின் பெயரால் கண்டனம் செய்யப்பட வேண்டிய தொன்றாகும். இப்போ போகின்ற போக்கில் இந்த யுத்தம் போனால் வடக்கும் கிழக்கும் வெகு விரைவில் பாலைவனமாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

தன்னை அழிக்க நினைப் போருக்கு எதிராக ஓர் நாடு தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் நாம் இன்று அறுவடை செய்து கொண்டிருக்கும் விளைவுகள் சமத்துவமின்மை, திட்டமிடப்பட்ட பாதபாடு, காரணமில்லா சந்தேக உணர்வுகள், வெட்கமில்லா ஊழல், லஞ்சம், அரசாங்க ஆணவம் என்ற பயிர்களின் அறுவடையே. இவை நாம் சுதந்திரம் பெற்ற காலக்கட்டத்தில் தோன்றி, இன்று பல வடிவங்களில் தழைத்து நிற்கின்றன.

பழைய, புதிய ஏற்பாடுகளில் பொறிக்கப்பட்டிருக்கும் எமது விசுவாசம் நாம் சமாதானத்தின் கருவிகளாயும், 'சமாதானம்' செய்கிறவர்களாகவும் இருக்கவேண்டும் என்று நமக்குக் போதிக்கின்றது. சமாதானம் செய்கிறவர்கள் சமாதானம் வைத்துக் கொள்ளுகிறவர்கள் போலல்லாமல் போராட்டக் காலத்தில் சமாதானத்தைக் கொண்டு வரத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களாவர். திருமறை பேசும் சமாதானம் மௌனம் சாதிப்பதாலோ, சோம்பியிருப்பதாலோ, பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்காமல் தப்பியோடுவதாலோ பெறப்படுவதொன்றல்ல. மாறாக பிரச்சனைகளை முகம் கொடுத்து, போராட்டத்தையும், மோதுதலையும் முகம் கொடுத்துப் பெறப்படுவதொன்றாகும்.

அரசாங்கத்தினரையும், விடுதலைப்புலிகளையும் பேச்சுவார்த்தைக்கு மீளும்படி நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். யுத்த களத்தில் உயிர்களைப் பலிகொடுத்தல் எமக்குக் கட்டாது, எமது இலட்சியங்களான நீதி, சமாதானம் என்பவை உரையாடல் பேச்சுவார்த்தை மூலமே எமது மக்களுக்குப் பெற்றுத்தரப்படலாம் என்பதில் நாம் திட நம்பிக்கைக் கொண்டுள்ளோம்.

அதே நேரம் அரசாங்கத் தரப்பு படைவீரர்களையும், விடுதலைப்புலிகள் போராளிகளையும்

1. ''ஒளிந்திருக்கும் எதிரியை''த் தேடும் போது பொதுமக்களின் உயிர்களைப் பலிகொடுக்க வேண்டாமெனவும், பொதுமக்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களை ஆகக் குறைந்த நிலையில் வைத்திருக்கும்படியும் வேண்டுகின்றோம்.

2. பழிவாங்குதலுக்காகவோ, தகவல் பெறுவதற்காகவோ பெண்கள், பிள்ளைகள், முதியோர் ஆகியோரைப் பயமுறுத்துதலைத் தவிர்க்கும்படி வேண்டுகின்றோம்.

3. பாதிக்கப்பட்ட பகுதிகளில் இடம்பெறும் நிர்வாகம், நிவாரண உதவி என்பவற்றில் எந்தவித பாகுபாடுமின்றி பட்சாபாதமில்லாது மிகக் கவனமாக நடந்துகொள்ளும்படி வேண்டுகின்றோம்.

4. எந்தப் பகுதிகளில் மக்கள் மிகுந்த தேவையால் வாடுகின்றார்களோ அப்பகுதிகளுக்கு நிவாரண வேலையில் ஈடுபட்டிருக்கும் தாபனங்கள் செல்வதற்கு அனுமதிக்குமாறு வேண்டுகின்றோம்.

5. சரணடைந்தோர், காயப்பட்டோர் யுத்த கைதிகள் ஆகியோரை நடத்தும் முறையில் சர்வதேச நடைமுறைகளையும், நாணயத்தையும் பின்பற்றும்படி வேண்டுகின்றோம்.

எதிர்காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்க ஆயுதம் ஏந்திய படையினருக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தால் அரசாங்கப் படைத் தரப்பில் அண்மையில் சேர்ந்திருக்கும் தென்பகுதி இளைஞருக்கும் மாற்று வழிகளை முன்வைக்க ஆவன செய்யப்படவேண்டும்.

பல்வேறு சமூகங்களுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் வேறுபாடுகளைப் போக்கவும், முழு நாட்டிற்கும் நன்மை பயக்கும் செயல்களை முன்வைக்கவும் முன்வரும்படி நாம் நமது நாட்டின் சமயத் தலைவர்களை வேண்டிக்கொள்கின்றோம்.

இறுதியாக நாட்டின் தற்போதைய வேதனைகள் விரைவில் நீங்கவும், எமது நாட்டில் சமூக நீதி, தேசிய ஒற்றுமை. நிரந்தர சமாதானம், உண்மை செல்வம் என்பவை கிட்டவும் உதவுமாறு எல்லா மக்களின் தந்தையாம் இறைவனை நாம் பிரார்த்திக்கின்றோம்.

ஒப்பம்: + ரேமண்ட் பீரிஸ்
இலங்கை கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக்குழுத் தலைவர்

## சென்னையில் குடும்ப மகாநாடு

தமிழகத் தலைநகர் சென்னையில் பேராயர் 4வது சர்வதேச குடும்ப மாநாட்டை தொடங்கி வைத்தார். இம் மகாநாட்டின் மையக்கருத்து புதிய சமுதாயத்தைக் கட்டிக் எழுப்புவது குடும்பம் என்பதாகும். குடும்பங்களில் நிலவுகின்ற அமைதியே சமுதாய நிலைகளின் அமைதியைக் கட்டி எழுப்பும் அடிப்படை சாதனம் என பேராயர் கஸ்மீர் தனது தொடக்க உரையில் குறிப்பிட்டுள்ளார்.

வீட்டுக்கொரு பாதுகாவலன் உங்கள் பங்கில் நடை முறைப் படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தொழிலாளர் சவுதியின் சமயக்கொள்கையை கண்டிக்கிறார்

(யூக்கன் செய்தி)

சவுதி அரேபியாவில் தொழில் புரியும் இலங்கையர் அந்நாடு அந்நிய தொழிலாளரை வரவேற்கிறது, ஆனால் அவர்களது மதங்களைத் தடைசெய்கிறது எனக் கூறுகின்றனர்.

அங்கு ஐந்து ஆண்டுகள் வேலை செய்த விக்டர் மென்டிஸ் என்பவர் சவுதி அரசு இத்தடைகளைத் தளர்த்த வேண்டுமென்றும், முக்கியமாக இந்த யுத்த காலத்தில் லட்சக்கணக்கான முஸ்லீமல்லாத படைவீரர் சவுதி மண்ணைக் காக்கப் போராடும்போது, சவுதி நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக உழைத்த 60 நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் போரின் நடுவில் அச்சத்துடன் வாழும்போது அவர்கள் தெய்வத்தை வழிபட சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

விமான நிலையத்தில் பிரயாணிகள் கொண்டு வரும் புனித சிலைகள் குப்பைத் தொட்டியில் வீசப்படுவதாகவும், பிறநாட்டவர் தம் இருப்பிடங்களில் வைத்து வணங்கும் சமயப் படங்கள் பரிசோதனைக்கு வருவோரால் கிழிக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

சவுதி பிரசைகளைவிட பிறநாட்டவர் அதிகமாக வாழும் அந்நாட்டில் இலங்கையையும், தாய்லாந்தையும் சேர்ந்த பௌத்தர்கள், இந்தியாவைச் சேர்ந்த இந்துக்கள், பிறநாடுகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் ஆன்ம வாழ்வுக்கு வழியின்றி இருக்கின்றனர்.

தொழிலாளருக்கு நல்ல சம்பளம் கொடுத்து நல்ல படியாக நடத்தி வரும் சமய சுதந்திரத்தையும் அளிக்குமாகில் அது மத்திய கிழக்கின் அதிசிறந்த நாடாகி விடும் என விக்டர் மென்டிஸ் கூறினார்.

## பௌத்தவிகாரைக்கு பேராயர் வருகை

(யூக்கன் செய்தி)

கொழும்புப் பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ பங்குகளைத் தரிசித்த போது அங்குள்ள இரு பௌத்த விகாரைகளுக்கும் வருகை தந்தார். 'கிறிஸ்தவம் அனைவரோடும் பகிர்ந்துகொள்ள வேண்டிய மாபெரும் கொடையாகும்' என அவர் கூறினார்,

கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற நாயக்ககந்தை பங்கை அவர் தரிசித்தபோது ஹெந்தலை, கெரவலப்பட்டிய விகாரைகளுக்கும் சென்றிருந்தார். அங்குள்ள தலைமைக் குருக்களும் மக்களும் ஹெந்தலை விகாரையைச் சேர்ந்த வண. இந்திரரட்ண தேரோ விகாரையின் தூபியிலுள்ள ஓவியங்களைப் பேராயருக்கு விளக்கினார்.

கெரவலப்பட்டிய விகாரையிலுள்ள மூலிகைத் தோட்டத்தைப் பார்வையிட்டு அங்கு ஓர் செவ்விளநீர்க் கன்றையும், கராம்புக் கன்றையும் நாட்டினார்.

## கத்தோலிக்க தொழிலதிபர்களின் பணி

(ஆசியா வோக்கஸ் செய்தி)

இந்தோனேசியாவைச் சேர்ந்த கத்தோலிக்க தொழிலதிபர்கள் தாம் ஆன்மவளம் பெறும்பொருட்டும், திருச்சபைக்கும், சமுதாயத்திற்கும் பணிபுரிவதன் பொருட்டும் ஒரு சங்கத்தை அமைத்துள்ளனர். கத்தோலிக்க ஒழுக்கவியல் பற்றி ஜகார்த்தாவில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கே இப்படி ஓர் சங்கம் அமைப்பதற்கு தூண்டுகோலாயிற்று.

நவம்பர் 23ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பேசிய வர்த்தகத்துணை அமைச்சரான ஜீவந்தோனோ பொருளாதாரம் நவீனமயப்படுத்தப்பட்டு வருவது அவர்களுக்கு ஓர் அறைகூவலாக அமைந்துள்ளது என்றும், அவர்கள் அதனை ஏற்று தனித்துவமான வாழ்க்கை முறையொன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் கூறினார்.

கத்தோலிக்க அரசியல்வாதியான ஹரி சிலலாஹி என்பவர் நாட்டிற்கும் சமூதாயத்துக்கும் சேவை செய்யும்போது கத்தோலிக்க தொழிலதிபர்கள் அப்போஸ்தல பணியே புரிகிறார்களென்றும், தமது சொந்த தொழில் மூலம் அவர்கள் கிறிஸ்துவுக்கு சாட்சிபகர முடியும் என்றும் கூறினார்.

ஆசிச் செய்தி அனுப்பிய ஜகார்த்தா பேராயர் லியோ சொகோட்டோ கத்தோலிக்க தொழிலதிபர்கள் வார்த்தைகளால் மட்டுமல்லாது செயல்களாலும் திருச்சபைக்கும் சமூகத்துக்கும் பணிபுரிய வேண்டுமென்றும் வேலையற்ற கத்தோலிக்கருக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி, வறுமையுற்றோருக்கு உதவ வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

## குருவானவர் தேர்தலில் தோல்வி

(ஆசியா வோக்கஸ் செய்தி)

எளியோர்க்காகக் குரல் கொடுக்கும் பொருட்டு உள்ளூர் தேர்தல் ஒன்றில் போட்டியிட்ட கேரளக் குருவானவர் ஒருவர் தேர்தலில் தோல்வியடைந்தார்.

பிதா செபஸ்தியன் எழும்துறுத்தில் என்பவரே கள்ளிக்கோட்டை மாவட்ட சபையில் போட்டியிட்டவர். அரசியல் கட்சிகள் வெளி ஆட்களை நிறுத்துவதை ஆட்சேபித்தே அவர் இவ்வாறு செய்தார். உள்ளூர் மனிதர் ஒருவர் தான் அப்பிரதேசத்தின் தேவைகளை எடுத்துக்காட்டமுடியும் என அவர் கருதுகிறார்.

ஒரு குரு அரசியலில் பிரவேசிப்பதை விரும்பாத மனப்பான்மைதான் கிறிஸ்தவர் பெரும்பான்மையாக வசிக்கும் தொகுதியில் இவர் தோல்வியடைந்தமைக்குக் காரணம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## போது நிலையினர் பிரதிநிதித்துவம் போதாது

(யூக்கன் செய்தி)

பிலிப்பைன் நாட்டின் 2-வது நிறை திருச்சங்கத்தில் துறவியரும் பொதுநிலையினரும் கலந்துகொண்டனர். ஆனால் சில முக்கிய பொதுநிலையினர் குழுக்களுக்கு அங்கு பிரதிநிதித்துவம் இல்லாதது அவதானிக்கப் பட்டது. 539 பிரதிநிதிகளுள் இளைஞருக்கு 4 பிரதிநிதிகளே இருந்தனர். சிறுபான்மையோர், ஏழைகள், பெண்களுக்குக் கூடிய பிரதிநிதித்துவம் இருந்திருக்க வேண்டுமென்று ஆயர் கோசே சோரா குறிப்பிட்டார்.

பிலிப்பைன் நாடு பல கலாசாரமுடையது. தாழ் நில மக்களின் கலாசாரம் மட்டுமல்ல, மலைவாழ் மக்களின் கலாசாரமும், பூர்வகுடியினர், முஸ்லிம்களின் கலாசாரமும் இங்கு கருதப்பட வேண்டும் என்று பேராயர் ஓர்லாண்டோ கேவேடோ குறிப்பிட்டார்.

குருக்கள் பற்றாக்குறையும், குருக்களுக்கு இருந்துவரும் பிரச்சினைகளும் விரிவாக ஆராயப்பட்டன.

## புறுனே நாட்டில் ஒரேயொரு குரு

(யூக்கன் செய்தி)

எண்ணெய் வளமுடைய முடியரசு நாடான புறுனேயில் உள்ள 10,000 கத்தோலிக்கருக்குப் பணிபுரிய ஒரேயொரு குரு மட்டுமே உள்ளார். பிறநாட்டு மதபோதகர் அங்கு இருப்பதற்கு அரசு தடைவிதித்துள்ளதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் அங்குள்ள மூன்று பங்கு ஆலயங்களிலும் மூன்று குருக்கள் கடமையாற்றிவந்தனர். இவர்களுள் பிதா பீற்றர் சியாங், பிதா ஜோசவ் மக்ளோறி ஆகிய இருவரது விஸாவையும் நீடிக்க அரசு மறுத்துவிட்டதால் அவர்கள் அங்கிருந்து வெளியேறவேண்டியதாயிற்று. 39 வயதான பிதா கொர்னேலியஸ் சிம் என்பவர் மட்டுமே அந்நாட்டுப் பிரசையாவார். அவரே தற்போது மூன்று பங்குகளையும் கவனித்து வருகிறார்.

அங்கு பணிபுரிந்த இரு கன்னியருக்கும் அரசு விஸா மறுத்துள்ளது. அந்நாட்டில் குருமடமோ, கன்னியர் உருவாக்க மடமோ இல்லை. பயிற்சிபெற்ற உபதேசியார் ஒருவரே உள்ளார். குருவில்லா செப வழிபாடுகளைப் பொதுநிலையினரே நடத்திவருகிறார்கள்.

## மறைவட்ட கத்தோலிக்க சங்கம்

கடந்த டிசம்பர் 22ஆம் திகதி தூத்துக்குடி மறைமாவட்ட கத்தோலிக்க சங்கம் உருவாக்கப்பட்டது.

ஆரம்பவுரை நிகழ்த்திய தூத்துக்குடி ஆயர் அமலநாதர் அவர்கள் சங்கத்தின் செயற்பாட்டுக்குத் தேவைப்படும் சகல உதவிகளையும் அளிப்பதாக வாக்களித்து, சங்கம் தமிழ் நாட்டில் முன்னின்று ஊக்கமாகச் செயற்படவேண்டுமென வாழ்த்தினார். எல்லா வேலைகளுக்கும் குருக்கள் மேல் தங்கியிராமல் தமது சொந்தக் காலில் நின்று பொதுமக்களுக்குத் துணைபுரியக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அவர் கூறினார்.

அனைத்திந்திய கத்தோலிக்க சங்கத்தின் பிராந்தியச் செயலாளரான டாக்டர் எஸ். ஆரோக்கியசாமியின் முன்னிலையில் சங்கத்தின் புதிய அலுவலர்கள் தெரியப்பட்டனர். பிதா ஆர்தர் ஜேம்ஸ் சங்கத்தின் ஆன்ம இயக்குநராக செயலாற்றுகிறார்.

## பெண்களின் சமத்துவம் சுயமதிப்பு மகத்துவம் பேணப்படவேண்டும்

பொதுநலவமைப்பு பெண் துணைவேந்தர்களின் மகாநாடு அண்மையில் டெல்லியில் நடைபெற்றபோது அமைச்சர் சிமன்பாய் மேத்தா இந்தியா பெண்களின் சமத்துவம், சுயமதிப்பு, மகத்துவம் ஆகிய இலட்சியங்களைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

இந்தியாவிலுள்ள சகல பல்கலைக்கழகங்களும் பெண்களுக்கு இடமளிக்கின்றன. ஐந்து பல்கலைக்கழகங்கள் பெண்களுக்கு மட்டுமே உரியவை. மொத்தம் 842 பெண்களுக்கே உரிய காலேஜ்களில் உயர் கல்வி பெறும் பெண்களின் தொகை 32 நூற்று வீதமாக அதிகரித்துள்ளது. ஆண்களுக்கே உரியதாகக் கருதப்பட்ட வர்த்தகம், பொறியியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலும் தற்போது பெண்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஆந்திரா கத்தோலிக்க இளைஞர் மகாநாடு

ஆந்திரா கத்தோலிக்க இளைஞரின் 2வது மகாநாடு நால்கொண்டா புனித அல்பொன்ஸஸ் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. ஆந்திராவைச் சேர்ந்த மறைமாவட்டங்களிலுமிருந்து சுமார் 200 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்த 5 நாள் மகாநாட்டை பொலிஸ் அதிபர் திரு. வெங்கட்ரெட்டி ஆரம்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## முதல்முறையாக அல்ஜீரிய தூதுவர்

1950க்கு பிறகு முதல் முறையாக அல்ஜீரிய நாட்டுத் திருத்தந்தையின் தூதுவராக ஆயர் மாரியல் றீகல் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் நியமிக்கப்பட்டார். கிழக்கு ஐரோப்பா கலைக்கப்பட்டபின் திருத்தந்தை தூதுவரால் அமைக்கப்படும் 4வது கிழக்கு ஐரோப்பிய நாடு அல்ஜீரியாவாகும். 64 வயதான மாரியல் றீகல் ஐந்து திருத்தந்தையர் காலத்தில் கிழக்குத் திருச்சபைகள் குறித்த பிரிவில் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# வைரவிழா....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர், களிப்பவர் உபதேசியார். ஒன்பது பங்குத்தந்தையருடன் இறைபணியில் இணைந்தவர், பல துணைப் பங்குத்தந்தையரின் பெரும் மதிப்பைப் பெற்றவர் உபதேசியார்.

வெள்ளையர் ஆட்சிக்காலத்திலிருந்து இன்றுவரை யாழ். மரியன்னை பேராலயத்தில் உபதேசியார் அறுபது ஆண்டுகளை ஆண்டவன் பணிக்கு அர்ப்பணித்தார். அவரின் அர்ப்பண வாழ்வினை இளம் தலைமுறையினர் அறிந்து கொள்வது நலம் பயக்கும்.

**அன்னையின் அரவணைப்பில்**

முத்தையா உபதேசியார் என்று எல்லோராலும் அறியப்பட்ட இவரின் முழுப்பெயர் பிலிப்புப்பிள்ளை முத்தையா என்பதாகும். இவர்ன் தந்தையின் பெயர் ஞானப்பிரகாசம் அபிரகாம்பிள்ளை. தாயின் பெயர் பிலிப்புப்பிள்ளை லோறன்சியாப்பிள்ளை. *18–11–1911* இல் பிறந்த இவருக்கு *25-11–1911* இல் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது

**அறிவுப்பாதையில்**

ஆரம்பக்கல்வியை மாவடிப் பள்ளிக்கூடத்தில் (புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில்) கற்றார். ஆயர் யூலன் ஆண்டவரிடம் முதல் நற்கருணை, உறுதிப் பூசுதல் பெற்றார். புனித சூசையப்பர் கூட்டத்தில் நான்கு வருடம் உபதேசியார் பணிக்குரிய ஆயத்தப் படிப்பைப் படித்தார். இந்தப்படிட்புக்கு வண. யோக்கீம் பிள்ளைச் சுவாமியின் தந்தை பேருதவியாக இருந்தார் என எங்கள் உபதேசியார் நன்றியுடன் நினைவு கூருகின்றார்.

**குருசோ பிறதரின் அடிச்சுவட்டில்**

*1930* இல் அருட்சகோதரர் குருசோ o. m. i. அவர்கள் இவரை உபதேசியாக உருவாக்கியவர்.

புனித சூசையப்பர் கூட்டத்துத் தலைமைப் பதவியைச் செவ்வனே பல ஆண்டுகள் வகித்த பொழுது, அவரின் செயல் திறமை கண்டு அவருக்கு 'மூப்பர்' பட்டம் கொடுத்து உபதேசியாரை குருசோ பிறதர் கௌரவித்தார். வண. குருசோ o.m.i. பிறதர் அவர்களைத் தன் நெஞ்சத்து நாயகனாக இன்றும் நினைந்து அவர் சேவை பற்றி அகமும் முகமும் மலரக் கூறுகிறார். பிறதர் தலைமையில் ஞானோபதேசம் படிப்பித்து, அவர் ஆசியையும், ஆதரவையும் பெற்றமை தனது அறுபதாண்டு ஆண்டவன் சேவையின் ஆணிவேராக இருந்ததற்குக் காரணமென நன்றிப் பெருக்குடன் கூறுகின்றார்.

**வண நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியார் பாசறையில்**

*1942* இல் வண. பிதா கில்லறி o m.i. அடிகளார், உபதேசியாரை உபதேசிப் பணிக்கு பயிற்சி பெற வண. நல்லூர் ஞானப்பிரகாசரிடம் அனுப்பினார். திருமறை ஒரு விழி, தமிழ்மொழி மறு விழி என இருவிழிகளையும் ஒளி குன்றாது காத்தவரான உலகப் புகழ் பெற்ற முனிவரிடம் திருநெல்வேலி சவேரியார் கோவிலில், பல்வேறு பிரச்சினைகளுக்கூடாக நற்செய்திப் பணியில் உபதேசியார் நன்கு பயிற்றப்பட்டார் சுவாமியின் பாசறையை விட்டு வரும் போது, அவரிடம் ஆசீர்வாதம் பெற்றுத் திரும்பிய நிகழ்வைத் தன்னால் மறக்க முடியாத நிகழ்வாகக் கூறி நெஞ்சம் நெகிழ்கின்றார்.

**பேராலயப் பணியில்**

பேராலயப்பணியில் தம்மை ஈடுபடுத்திய பொழுது திருவாளர் மிக்கேல்பிள்ளை, வின்சன்ற் உபதேசியார் டோமினிக் சங்கிடுத்தாம் ஆகியோருடன் இளைஞனான முத்தையா உபதேசியார் ஒன்றிணைந்து செயற்பட்டார். பணிகள் பல நிறைந்த பேராலயத்தில், பணிகள் பல தம் உடன் பணியாளர்களால் திணிக்கப்பட்ட போதும் சகிப்புத்தன்மையும், செயல்திறமையும், கொண்ட உபதேசியார் அவற்றைத் திறம்படச் செய்தார்.

பேராலயப் பணியில் திருமணம், முதல் நன்மை, உறுதிப் பூசுதல் போன்ற அருட்சாதன ஆயத்தங்களை, வந்தவர் மனதில் நன்கு பதியும் வண்ணம் படிப்பித்தார். கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமன்றி பிறசமயத்தவர்கள், சிறப்பாக இந்துக்கள் மத்தியிலும் இறையேசுவின் இராச்சியத்தை உருவாக்கினார். வழி தவறிய ஆட்டுக் குட்டிகளைத் தேடிச் சென்ற மேய்ப்பனாக வீடுகளைத் தரிசனம் செய்து, ஒப்பரவு அருட்சாதனத்தின் மாண்பினை எடுத்துரைத்தும், எடுத்துரைக்கும் துண்டுப்பிரசுரங்களைக் கொடுத்தும் இறையேசுவிடம் அழைத்து வந்தார்.

**மேலதிகப்பணி**

பேராலயப் பணிகளுடன் மேலதிகப்பணியாக புனித திருமுழுக்கு அருளப்பர் (சஞ்சுவாம்) கோவிலிலும் பல வருடங்களாகக் காலையிலும் மாலையிலும் கடமை செய்து வந்தார். அக்காலத்தில் குருக்கள் இல்லாத போது அப்பங்கு மக்களின் துன்ப துயரங்களில் பங்கேற்று புரிந்துணர்வுடன் துயர் துடைப்புப் பணியைச் செய்துவந்தார். புனித ஆரோக்கிய நாதர் ஆலயத்திலும் பூசை ஆயத்தங்களை அன்று செய்தார். மரணச் சடங்குகள் நடைபெறும் இல்லங்களில் எழும் அழுகுரல்களை முத்தையா உபதேசியாரின் செப ஒலி அடக்கி விடும். அவ்வொலியில் எழும் செபங்களின் வசீகரத்தை இன்றும் பலர் போற்றிப் புகழ்கின்றனர்.

**குடும்பப்பணியில்**

இத்தனை பணிகளையும் சிறப்பாகச் செய்ய இவர் என்ன துறவியா? பிரமச்சாரியா? என இன்று பலர் நினைப்பதுண்டு. திருமணம் என்னும் திருவருட்சாதனத்தை 32 வயதில் பெற்றார். அக்னஸ் இசபெல்லா இவரின் துணைவியாகும். ஐந்து செல்வங்களுக்குத் தந்தையான இவர் ஒரு செல்வத்தை அரும்பிலே இழந்தார். காலச்சக்கரத்தின் பொருளாதார அழுத்தங்கள் மத்தியிலும் துணைவியார் துணையுடன் பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்தார். கடவுளுக்கு ஏற்ற செல்வங்களாக வளர்த்தார்.

யோபுவைச் சோதித்தது போல் உபதேசியாருக்கும் பெரிய சோதனைகள் பல வந்தன, குடும்பத்துத் தலைமகன் ஜெகந்நாதன் இறை அழைத்தலில் மூன்றாம் வருட மாணவனாக அம்பிட்டிய குருமடத்தில் இருந்தபொழுது விடுமுறை நாட்களுக்கு வீடுவந்தார். வளலாய் கடற்கரைக்கு நண்பர்களுடன் குளிக்கச் சென்றவேளை கடல் அவரின் உயிரை எடுத்துக்கொண்டது. அடுத்து கால வெள்ளத்தில் அடுத்த ஒரு மகனும், (அலோசியஸ் அமிர்தநாதர் பொறியியலாளர்,) 1983 இனக்கலவரத்தால் சொந்தமண் விட்டு மத்திய கிழக்கில் தொழில் பார்த்தவேளை வாவியில் குளிக்கச் சென்றபோது உயிர் துறந்தார். இத்தனை இழப்புக்கள் மத்தியிலும், பொருளாதார அழுத்தத்தின் சுமையோடு உபதேசியார் இறைபணியைத் தொடர்ந்தார். அறுபது ஆண்டுகளை ஆண்டவன் வல்லமையுடன் கடந்தார். "எல்லாம் யேசுவே, எனக்கெல்லாம் யேசுவே" என்ற இலட்சியத்துடன், போலித்தனம் என்பது எள்ளளவும் இன்றி, அன்று தொடக்கம் இன்று வரை வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு இறைபணியாற்றும் முத்தையா உபதேசியாரின் நற்பண்புகளை விரிக்கிற் பெருகும்.

**இறைக்கர வலிமை**

இத்தகைய இறைத் தொண்டரை நாம் பெற்றமை எமக்குப் பெருமையே. இறைத் தொண்டு புரிபவரை இன்னல்கள் தாக்கினாலும் இறைக்கர வலிமை என்றும் காக்கும், வழிநடத்தும் என்பது உண்மையே.

இவரின் அறுபது ஆண்டுப் பணியினைப் போற்றும் எமக்கும், அவரிடமிருந்த இறைப்பற்று, செயல்திறன் இளைய தலைமுறைக்கும் சுவற இறைவனை வேண்டுவோம். அவரின் பணி ஆன்மீக வழிகாட்டலாக மேலும் தொடர வாழ்த்துவோம்.

# ஆந்திரா...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பித்து வைத்துப் பேசுகையில் கட்டுப்பாடு, முன்னேற்ற ஆர்வம்கடு, உழைப்பு என்னும் பண்புகளை விருத்தி செய்யுமாறும் சுயதொழில் வாய்ப்புகளைத் தேடிக்கொள்ளுமாறும் அவர்களுக்கு அறிவுரை கூறினார்.

நால் கொண்டா ஆயர் இன்னையாவும் வருங்கால ஆயர் தும்மாவும் மகாநாட்டின் ஆரம்பத்தில் இளைஞர் வழிகாட்டிகளுடன் கூட்டுப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

விமர்சனம்

# "அனைத்தும் அவரே"

இம்மண்ணின் வாசனைக் கேற்ப பொருத்தமான நாடகங்களை மிகத் திறமையாக உருவாக்கி, வேண்டிய நேரத்தில் சிறப்பாக மேடையேற்றுவதில் யாழ். திருமறைக் கலாமன்றத்துக்கு ஈடு, இணை இல்லையெனலாம்.

அவ்வகையில் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவன்று மேடையேறிய 'அனைத்தும் அவரே' என்ற கூத்து தனியிடத்தைப் பெறுகின்றது.

அனைத்தையும் இழந்து, இழக்க இனி எதுவுமில்லையென்ற நிலையில் வாழும் எம் மக்களுக்கு "அனைத்தும் அவரே" மூலம் ஓர் உன்னத உண்மை எடுத்தியம்பப்பட்டுள்ளது. அழிவுகளையும், இழப்புகளையும் எண்ணி ஜாதகங்களையும், பஞ்சாங்கங்களையும் புரட்டுவதை விடுத்து, அனைத்திலும் இறைக்கரத்தை காண்பதே முறையாகும். இதில் யோபுவின்பாத்திரத்தை நடித்த திரு. பேக்மன்ஸ் அவர்களின் நடிப்பும், குரல் வளமும் அவரின் பண்பட்ட நடிப்பாற்றலுக்கு எடுத்துக்காட்டாகும். சாத்தானாக நடித்த திரு கொலின்ஸ் அவர்களின் நடிப்பும் மிகவும் தத்ரூபமாக இருந்தது. பொதுவாக இதில் பங்கேற்ற அனைவர் பங்களிப்பும் மிகவும் மெச்சுதற்குரியது.

யோபுவின் மனைவியாக நடித்த பாத்திரத்தில் வறுமை இழப்புக்களின் தாக்கச் சுவடுகள் வெளித்தோற்றத்தில் எள்ளளவும் காணப்படாதது ஒரு குறையாகும்.

மன அழுத்தங்களினாலும் இழப்புக்களாலும் பாதிப்புக்குள்ளாயிருக்கும் எம் மக்களுக்கு இது ஒரு வலி நிவாரணமாகும். கூத்திற்கு முதல் "இசைத்தென்றல்" திரு யேசுதாசனின் இசையாக்கலில், அருள்திரு. மரியசேவியர் அவர்களின் ஆக்கத்தில் உருவான நான்கு முத்தான பாடல்கள் இடம் பெற்றன, தென்னிந்திய கலைஞர்களுக்கு எம்மவர்கள் எவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை சப்தகானங்கள், எமது மண்ணின் இராகங்களுக்குப் பின் மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளார்கள். கலையில் இறைவனைக் காணும் திருமறைக்கலாமன்றத்தினரின் பணி மென்மேலும் தொடரட்டும்.

எம். என். நவரட்ணராஜா
வளன்புரம்
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

# கிறிஸ்தவ...

(1ஆம் பக்கம் தொடர்ச்சி)

கில் பங்குபற்றியமை மிகவும் பாராட்டுதலுக்கு உரியதொன்றாகும். யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்தும் மாணவ- மாணவிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

இக்கருத்தரங்கு, பங்குபற் பங்குபற்றிய அனைவருக்கும், அவர்களின் பங்குகளுக்கும் அளப்பரிய நன்மை பயக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

# பொதுநிலை...

(1ஆம் பக்கம் தொடர்ச்சி)

**நேர்முகப்பணி**

இவையெல்லாம் போற்றுதற்குரியன எனறாலும் பொதுநிலையினர் தங்கள் நிலைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு நேர்முகமாகவும் நற்செய்திப் பணி புரியக் கடமைப்பட்டுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை.

கத்தோலிக்க விசுவாசத்தின் கருவூலங்களைப் பிறருக்கு அறிவிப்பதில் பொதுநிலையினர் எப்போதும் ஓரளவு தயக்கம் காட்டியுள்ளனர். நல்ல பிரமாணிக்கமுள்ள கிறிஸ்தவர்கள் கூட இக்காரியத்தில் பின் தங்கியுள்ளனர். இப்பணி குருக்களையும், துறவிகளையும் வேதியரையும் சார்ந்தது என்னும் தவறான எண்ணம் இதற்குப் பெரியதொரு காரணமாகலாம் பொது நிலையினரின் சேவையில் நம் பிரிவினைச் சகோதரர் முன்னணியில்உள்ளனர் என்பது உண்மை.

"கத்தோலிக்க சேவையின் பாப்பு" எனப் போற்றப்படும் திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் அச்சேவையை திரு ஆட்சியினரின் அப்போஸ்தல பணியின் ஒரு துணைக் கருவியாகவே கருதிப் போதித்தார். இரண்டாம் வத்திக்கான் சங்கமோ இப்பணி அனைத்து இறைமக்களுக்கும் உரியது என விளக்கி பொதுநிலையினரின் உரிமையையும், கடமையையும் வலியுறுத்தியுள்ளது. ஆனால், இக்கருத்து இன்னும் அடிமட்டத்திற்கு வந்து சேரவில்லை, செயற்படவில்லை என்றே தோன்றுகின்றது.

(அடுத்த இதழில் முடியும்)

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org